Arimā Nōkku

# அரிமா நோக்கு

2:1 ஏப்பிரல் 2008

ரூ. 20

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா
# நோக்கு
2:1 ஏப்பிரல் 2008

செம்மொழி
-*மாண்புமிகு நிதியமைச்சர்* 03
Contributions of Tamil Culture to World Civilisation –*Kamil V. Zvelebil* 06
கண்ணகி - *வ. ஜெயதேவன்* 07
பத்தினி வணக்கம்
- *மு. இராகவையங்கார்* 08
Kannagi: Global Symbol of Justice
– *Eric Miller* 12
பன்னிரு திருமுறைகளில் பாதாதி கேசப்பாடல்கள்: ஒப்பாய்வு
- *பழ. முத்துவீரப்பன்* 17
மொழி ஆளுமையில் செய்முறைப் பாடத்திட்டத்தை முன்வைத்து
- *சு. மாதவன்* 22
புதுமைப்பித்தன் பற்றிய எதிர்நிலை மதிப்பீடுகள்- *ம. மதியழகன்* 27
பூங்காவின் புதுப்பொலிவு
- *ந.ஆனந்தி* 32
தமிழ் மரபு அறக் கட்டளையின் ஆங்கிலப் புத்தாண்டு வெளியீடுகள்
- *சுபாஷினி கனகசுந்தரம்* 35
பாரதியும் பாரதமும்
-*அஞ்சலிஅன்னாபாய் இராஜசேகரன்* 39
பாரதி, பாரதிதாசன் கவிதைகளில் பெண்ணியம் - *இரா. வனிதா* 42
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் - *பா. மதுகேஸ்வரன்* 45
சந்திப்பு: எழுத்தாளர் செ. கணேசலிங்கன்
- *இராம.குருநாதன்* 46
மேரி வோல்ஸ்டோன்கிராப்ட்
- *இரா.பிரேமா* 66
ஆட்சி நெறியும் அறநூலும்
- *ந.க. மங்களமுருகேசன்* 60
உவமை > உருவகம் > குறியீடு
- *ச.அன்பு* 65
*Literary Heritage of South India: A Historical Perspective*
– *Thamizhannal* 66
மனித நேயம்- *க. தமிழ்அழகன்* 69

நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள் *படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும், மாற்றவும் பதிப்பாளருக்கு உரிமை உண்டு. முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து எதனையும் எடுத்தாளலாகாது.*

## தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## மொழித் தூய்மையம்

மொழித்தூய்மையம் குறித்த சிந்தனைகளும் ஆய்வுகளும் இன்று பல்வேறு போக்குகளில் வளர்ந்துவருகின்றன. பொதுநிலையில் *மொழிக்காப்புக் கோட்பாடு* என்றும் *பழைமையைப் பேணும் கோட்பாடு* என்றும் கருதப்பட்டாலும், அரசியல், சமூகம், சமயம், வாணிகம், மொழி ஆகிய பல தளங்களிலும் மொழித்தூய்மையத்தின் பரிமாணங்கள் தனித்தனி உள்ளடக்கங்களோடு செயல்படுகின்றன என்றே சொல்ல வேண்டும்.

ஓரின மொழிகளிடையே ஏற்படுகிற உறவு, ஊடாட்டங்கள் ஒரு வகையாகவும், அயலின மொழிகளின் உள்நுழைவு காரணமான உறவு, ஊடாட்டங்கள் பிறிதொரு வகையாகவும் இயங்கி மொழித்தூய்மையைக் குலைத்துவிடுகின்றன. வல்லாண்மை மிக்கவர்கள் தம் மொழி ஆதிக்கத்தைச் செலுத்தி இன்னொரு மொழியைத் தமது தாய்மொழியின் கிளை மொழி என்று கருதத் தக்கபடி கீழிறக்கிவிடும் நிலைக்கு முயல்வதும், தமது மொழியின் உதவி இல்லாமல் அம்மொழி இயங்க முடியாது என்று அடிபணிய வைப்பதும்கூட நிகழ்ந்து விடுகின்றன.

பிறிதொரு மொழிச் சொல் வந்து சேரும்போது, ஒரு மொழி அதற்கிணையான தனது சொல்லை இழந்துவிடுகிறது; வந்து சேரும் சொல்லுக்கு இணையான சொல் தன்னிடம் இல்லை எனினும், தன்னிலிருந்து அத்தகைய சொல்லைப் புதுவதாகப் படைத்துக் கொள்கிற முயற்சியை முறித்துப்போட்டுவிடுகிறது. இவை இரண்டும் அல்லாமல் அது ஏற்படுத்தும் கலப்புநிலை, மொழியின் தனித் தன்மையை இழக்கச் செய்வதோடு, பண்பாடு-சமூகத் தளங்களில் அடையாள அழிப்பு வேலையையும் முனைப்போடு செய்கிறது.

மொழித்தூய்மை, இன்று தமிழர்கள் மட்டுமே உலகில் முன்னெடுக்கிற கருத்தும் முயற்சியும் என்று கருதுவது பிழை. உலகில் பல்வேறு நாட்டினரிடையேயும் இன்று தாய்மொழிக் காப்புக்கு மொழித்தூய்மையம் பேணப்படுவது தேவை என்ற கருத்து அழுத்தமாகக் காணப்படுகிறது.

இத்தலைவாயில் வரிகளில் மொழித்தூய்மையத்தின் சில வடிவங்களைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

*அணுகுமுறை அடிப்படையில்*, தொல்வழக்குத் தூய்மையம், இனவியல்சார் தூய்மையம், மேல்தட்டுநிலைத் தூய்மையம், காரண காரிய அடிப்படைத் தூய்மையம், சீர்திருத்தத் தூய்மையம், விளையாட்டுப்போக்குத் தூய்மையம், நாட்டுப்பற்றடிப்படைத் தூய்மையம் எனப் பல வடிவங்கள் காணப்படுகின்றன.

*முனைப்புசார் தூய்மையமாக*, எல்லைநிலைத் தூய்மையம், மட்டான தொடர் நிலைத் தூய்மையம், செவ்விதாக்குநிலைத் தூய்மையம், கூர்தலறவியல் தூய்மையம், அசைவுறு நிலைத் தூய்மையம், நிலைத்த, உறுதிநிலைத் தூய்மையம்-இப்படிப் பல வடிவங்கள்.

*மொழியியல்சார் மொழித்தூய்மையம்*, அகராதியியல், எழுத்திலக்கணம், சொல் வடிவ நிலை அமைப்பியல், ஒலியியல்-எனப் பல்வகைசார்ந்து அமையும் வடிவங்களைப் பெறுகிறது.

இவையெல்லாம் தாண்டி, மறிதருநிலைத் தூய்மையம், கடுந்தீவிரத் தூய்மையம் என்றெல்லாம் மொழித்தூய்மையம் இன்று பல்வேறு அடிப்படைகளில் பேசப்படுவதற்கு உரிய அடிப்படைக் காரணம், மொழிக் கலப்பு என்பது ஒரு மொழியின் தூய்மையை வீழ்த்துவது என்று மட்டும் அல்லாமல், அம்மொழி பேசும் மக்களின் இன, பண்பாட்டு, மரபு, வரலாற்று அடையாளங்களையும் வீழ்த்துகிற கொடுமைமிக்க செயலாகவும் அமையக்கூடும் என்பதுதான்.

மொழியியல், தமிழ் அறிஞர்கள், இங்கு இடம்பெற்றிருக்கிற மொழித்தூய்மையக் கோட்பாட்டு உள்ளடைவுகள் பற்றி விரிவாக எழுத முன்வருவது இன்றைய நிலையில் கட்டாயத் தேவையாகிறது.

தமிழ் மொழியின் தூய்மையைக் காப்பதும் வளர்ப்பதும் தமிழ் மக்களின் தலையாய கடமை என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டேதான் இருக்க வேண்டும்.